# வடகிழக்கு பகுதி பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் இரகசிய பொலிஸ் விசாரணைக்கு செல்கின்றன

## நாலாம் மாடியில் விசாரணை பல பாஸ்போர்ட்டுகள் தடுப்பு

வடக்கு கிழக்கில் இருந்து பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் சில இரகசிய பொலிஸாருக்கு அனுப்பப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு விண்ணப்பித்து பல நாள்களாக பாஸ்போர்ட் வராததால் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு சென்று விசாரித்த போது இந்த விடயம் தெரிய வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிலரின் பாஸ்போர்ட்டுகளும் இரகசியப் பொலிஸாரினால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிய வருகிறது இதனால் அலுவலகம் வருமாறு கடிதம் வந்தும் சிலர் அங்கு செல்லவில்லை எனவும் பல பாஸ் போர்ட்டுகள் அனுப்பப்படாமல் இருப்பதாகவும் கூறப் படுகிறது. (33)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 176 பிரசோற்பதி வைகாசி 09 (23-05-1991) வியாழன்

# ராஜீவின் படுகொலையால் தமிழ் நாட்டில் வன்முறைகள்

## ஏனைய மாநிலங்களுக்கும் பரவுகின்றன

நேற்று முன்தினமிரவு தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழகமெங்கும் வன்முறைகள் வெடித்துள்ளன.

தமிழ்நாடு நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் வன்முறையில் ஈடுபட்ட குழுவினர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடாத்தியதில் ஒருவர் பலியானார். திருச்சியில் இரு கோஷ்டிகளிடையே நடைபெற்ற மோதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

மதுரையில் பொலிஸ் நிலையம் ஒன்று தாக்கப்பட எடுத்த முயற்சியில் ஐந்து பொலிஸார் காயமடைந்தனர்.

இதேசமயம் சென்னையில் பத்திரிகை நிறுவனம் ஒன்றும் மற்றும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம், பஸ்கள், பொலிஸ் ஜீப் என்பனவும் தீக்கிரையாக்கப்பட்டன.

தேர்தல் பிரசாரத்துக்கு அமைக்கப்பட்ட பல அரசியல்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் புத்தபிக்கு வெற்றி பெற்றார்

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது பத்தேகம பிரதேச சபைக்கு போட்டியிட்ட புத்தபிக்கு ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

நவசமசமாஜக் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர் ஒரு பட்டதாரியுமாவார். புத்த பிக்கு ஒருவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றது இதுவே முதல் தடவை.

## தந்திரிமலை காவலரண்களை விடுதலைப்புலிகள் நிர்மூலம்

நேற்று முன்தினமிரவு தந்திரிமலையில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் முகாமிற்கு 500 யார் தொலைவில் அமைந்திருந்த மூன்று காவலரண் மீது விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலினால் மூன்று காவலரண்களிலும் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் அனைவரும் அருகாமையில் அமைந்திருந்த முகாமிற்கு தப்பி ஓடிவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளால் இம் மூன்று காவலரண்களும் நிர்மூலமாக்கப்பட்டன. (71)

## நேருவின் வாசஸ்தலத்தில் ராஜீவின் பூதவுடல் அஞ்சலிக்கு

படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தியின் பூதவுடல் டில்லியில் முன்னாள் பிரதமர் நேருவின் வாசஸ்தலமான தீன்மூர்த்தி பவனில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் முண்டியடித்ததாகவும் சனக் கூட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்ததில் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(விரிவான செய்திகள் 3ஆம் பக்கத்தில்)

## திருமதி சோனியா காந்தி காங்கிரஸ் தலைவியானார்

ராஜீவின் மறைவையடுத்து திருமதி சோனியா காந்தி இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திரா காங்கிரஸின் செயற்குழுவின் அவசர கூட்டத்தில் இம் முடிவு நேற்று மாலை எடுக்கப்பட்டது. செயற்குழுக்கூட்டத்தில் பி. வி. நரசிம்மராவ் தலைமையிலான

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை ஆணைக்குழு விரைவில் சட்டமூலம்

மனித உரிமை ஆணைக்குழு அமைப்பதற்கான சட்டமூலம் யூலைமாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் செயற்பாடுகள், அதிகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் ஆராயப்பட்டதாக அச்செய்திகள் தெரிவிக்கின்றன. 33

## வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பொதுமக்களால் தாக்கப்பட்டனர்

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட செய்தியினால் ஆத்திரமடைந்த மக்கள் பல வெளிநாட்டுப் பத்திரிகையாளரைத் தாக்கியுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இப்பத்திரிகையாளர்களை நோக்கி பலர் துவேஷமான கோஷங்களையும் எழுப்பினர்.

## சுதந்திரக்கட்சி எம். பி. மீது ஆள்கடத்தல் வழக்கு

அனுராதபுரம் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரைக் கடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டியதற்காகவும், இதற்கு உடந்தையாக இருந்ததற்காகவும் கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி யான ஜெய

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வாழப்பாடி கண்டனம்

## தமிழகத்திலிருந்து ஈழத்தமிழரை வெளியேற்றுக!

நேற்றுமுன்தினம் சென்னையில் ராஜீவ் காந்தி கொல்லப்படக் காரணமாக இருந்த வெடிகுண்டுச் சம்பவத்திற்கு விடுதலைப்புலிகளே காரணம் என காங்கிரஸின் தமிழகப் பிரிவுத்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனால் தமிழகத்தில் உள்ள அனைத்து ஈழத்தமிழர்களையும் வெளியேற்ற வேண்டும் எனவும் வாழப்பாடி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேசமயம் தமிழகப்பொலிஸார் இக்கொலைக்கு சீக்கிய தீவிரவாதிகள் அல்லது விடுதலைப்புலிகள் அல்லது வெளி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## காஷ்மீர், பஞ்சாப் தீவிரவாதிகள்

## ராஜீவின் படுகொலை தவிர்க்க முடியாதது!

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டது நியதியான ஒன்றே, ஆனால் அவரது கொலைக்கும் எமது அமைப்புக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என காஷ்மீர் விடுதலை முன்னணி தலைவர் ஹமூல்லா கான் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் ராஜீவின் கொலை தவிர்க்க முடியாத ஓர் நிகழ்ச்சிதான் என சீக்கிய காலிஸ்தான் விடுதலை அமைப்பு லண்டனில் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளது.

## வீரமரணம்

கடந்த செவ்வாயன்று காலை தச்சன் காட்டில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான மோதலில் இந்திரன் (மு. கேதீஸ்வரன் நல்லூர் வடக்கு) வீரமரணமடைந்தார். (71)

## வாழப்பாடி, மூப்பனார் மயிரிழையில் உயிர் தப்பினார்

ராஜீவ் காந்தி கொல்லப்படக் காரணமாக இருந்த வெடிகுண்டு வெடித்த சமயம் ஜி. கே. மூப்பனாரும் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

வெடிகுண்டு வெடித்து ராஜீவ் தலை சிதறியதை வாழப்பாடி ராமமூர்த்தியும்,

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவ் வெற்றிபெற்றால் மட்டுமே அமெதித்தொகுதியில் மீள் தேர்தல்

ராஜீவ்காந்தி கொல்லப்பட்டுவிட்டபோதிலும் அவர் போட்டியிட்டு, ஏற்கனவே வாக்குப்பதிவுகள் இடம் பெற்ற அமெதித் தொகுதி தேர்தல் ரத்துச்செய்யப்படமாட்டாதென இந்திய தேர்

—04 ஆம் பக்கம் பார்க்க

# புதிதாக 3000 ஆங்கில ஆசிரியர்கள்; ஜூலையில் போட்டிப் பரீட்சை

புதிதாக ஆங்கில ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு கல்விச் சேவைகள் ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

புதிதாகப் பாடசாலைகளில் ஆங்கிலம் போதிப்பதற்கென மூவாயிரம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவர்.

முதலில் ஜூலை மாத நடுப்பகுதியில் விண்ணப்பதாரிகளுக்கு ஆங்கிலத்தில் போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படும். போட்டிப் பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதன் மூலம் புதிய ஆங்கில ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தெரிவாகும் 3000 ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கு முதலில் குறுகிய கால சேவை முன்பயிற்சி வழங்கப்படும்.

## நீங்கள் தாவர உணவினரா? இருதயவியாதி உங்களுக்கில்லை

தாவர உணவுக்காரர்களை வியாதிகள் அதிகமாகப் பாதிப்பதில்லை. இறைச்சி உண்பவர்களை விட இவர்கள் எழுபது சதவீதம் குறைவாகவே இருதய வியாதியால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு புற்று நோய் ஏற்படுவதும் குறைவு. இது மேற்கு ஜேர்மனிய ஆய்வு.

## இவ்வருடத்திற்கான ஓய்வூதிய கொடுப்பனவு திகதிகள் அறிவிப்பு

1991ஆம் ஆண்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டிய திகதிகளை ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி மே மாதம் 18ஆம் திகதியும், யூன் 13ஆம் திகதியும், யூலை 11ஆம் திகதியும், ஆகஸ்ட் 8ஆம் திகதியும், செப்டெம்பர் 12ஆம் திகதியும், அக்டோபர் 15ஆம் திகதியும், நவம்பர் 14ஆம் திகதியும், டிசம்பர் 12ஆம் திகதியும் ஓய்வூதியக் கொடுப்பனவு தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மே மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் அடுத்து வரும் கப்பலில் வரவுள்ளதாகவும் வந்தவுடனே கொடுப்பனவை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## விஸ்வநாதனின் இசைநிகழ்ச்சி முதல்தடவையாக கொழும்பில்

மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன் கொழும்பில் முதல் முறையாக இசை நிகழ்ச்சியொன்றை நடாத்துவதற்காக அடுத்த மாத இறுதியில் இலங்கை வரவுள்ளார்.

எம். எஸ். உடன் அவரது இசைக்குழுவைச் சேர்ந்த 27க்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்களும் இலங்கை வரவுள்ளனர்.

கொழும்பு கிழக்கு றோட்டரிக்கழகத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இசைநிகழ்ச்சியில் எம். எஸ். குழுவினர் கலந்துகொள்வர்.

இவ்விசைவிருந்தில் எஸ். பி. பாலசுப்பிரமணியம், வாணி ஜெயராம், எல். ஆர் ஈஸ்வரி, ஸ். எஸ் சசிரேகா, கோவை சௌந்தரராஜன், மற்றும் பல முன்னணி இசை மற்றும் நகைச்சுவைக் கலைஞரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் இரு தினங்கள் இடம்பெறவுள்ள இசைவிருந்தில் எம். எஸ்.சின் குழுவில் நவீன வாத்தியக்கருவிகளால் சப்தஜாலங்கள் இசைப்பவரும், பல திரைப்படங்களில் அப்பா, வேடம் ஏற்று புகழ் பெற்றவருமான 'மீசை முருகேச'வும் இடம்பெறுகிறார்.

## காரைநகர் இராணுவ நடவடிக்கையால் ஐயாயிரம் மீனவர்கள் பாதிப்பு

காரைநகர்ப் பகுதியில் கடந்த மாதம்முதல் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையால் 5000 க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதனால் நடுத்தர மற்றும் வறிய மக்களின் அன்றாட தொழில் பாதிப்பினால் நாளாந்த வாழ்க்கை நிலை மோசமடைந்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கையால் பெருமளவு மீன்பிடி உபகரணங்களையும் காரைநகரில் கைவிட்டுவிட்டு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-11)

## காயமடைந்தோரின் சாட்சியம் பெற ஆணைக்குழு நேற்று பிரான்ஸ் புறப்பட்டது

மடுவில் பிரான்ஸ் வைத்தியக் குழு மீது மேற்கொள்ளப்பட்ட ஆகாயத் தாக்குதல் பற்றிவிசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு மேலதிக வாக்குமூலங்களைப் பதிவதற்காக நேற்று பிரான்சுக்கு பயணமானது.

இக்குழு இச் சம்பவத்தில் காயமடைந்து தற்பொழுது சிகிச்சை பெற்று வரும் எம். எஸ். எப். குழு அங்கத்தவர்கள் மூவரினதும் வாக்குமூலங்களை அங்கு பதிவு செய்யும்.

இக்குழுவின் முன் ஏற்கனவே எம். எஸ் எவ் நிறுவன கொழும்புக் கிளை நிருவாகி கிறின் டீன் நீவுப் சம்பவத்தில் காயமடைந்து கொழும்பில் சிகிச்சை பெற்று வரும் வாகனச் சாரதி ஒஸ்டின் பேரல் குணசேகரம் ஆகியோரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது.

## மார்ச்மாத மதிய உணவு முத்திரை மாணவர்க்கு விரைவில் கிடைக்கும்

யாழ் மாவட்ட மாணவர்களுக்கான மார்ச் மாத உணவு முத்திரைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இந்த உணவு முத்திரைகள் கொழும்பிலிருந்து கப்பலில் விரைவில் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்படவுள்ளன. (74)


சென் ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்

### க.பொ.த. உயர்தர வகுப்பிற்கு (1993) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பங்களை நேரடியாகக் கையளிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 29.5.91.

அனுமதிப் பரீட்சை 1.6.91 — நேரம் காலை 9.00 மணி விஞ்ஞானப் பிரிவுக்கு கணிதம், விஞ்ஞானத்திலும், வர்த்தகப் பிரிவுக்கு வர்த்தகம், சமூகக் கல்விப் பாடங்களிலும் பரீட்சை நடைபெறும். விண்ணப்பத்தில் பாடநெறி தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அதிபர்.
05097



செம்பியன் பற்று புனித பிலிப்புநேரியார்

### ஆலய வருடாந்த திருவிழா

வைகாசி 25 சனி மாலை நற்கருணை வழிபாடும்
26 ஞாயிறு காலை 7 மணிக்கு
திருநாட் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்கு மக்கள்
05096


## யாழ் பல்கலைக்கழகத்திற்குப் புதிய துணைவேந்தர்; மூவரின்பெயரை மூதவை அடுத்தமாதம் சிபார்சுசெய்யும்

யாழ் பல்கலைக்கழகத்திற்கான புதிய துணைவேந்தர் தெரிவு அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக்காலம் ஆவணி மாத இறுதியுடன் முடிவடைவதால் புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்யவேண்டியுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார்.

ஜூன் 15 ஆம் திகதி கூடும் யாழ் பல்கலைக்கழக மூதவை புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்கு மூவரின் பெயர்களைச் சிபார்சு செய்யும்.

பின்னர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மூலம் பிரதம மந்திரிக்கு விவரம் தெரியப்படுத்தப்பட்டு பிரதம மந்திரியே புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழகத்திற்கான முதலாவது துணைவேந்தராக பேராசிரியர் சு. வித்தியானந்தனும், இரண்டாவது துணைவேந்தராகத் தற்பொழுது கடமையாற்றும் பேராசிரியர் அ. துரைராஜாவும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ளவர் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது துணைவேந்தர் என்ற பெருமையைப் பெறுவார். 70

## போலிச் சான்றிதழ் வழங்கிய அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை

தொண்டர் ஆசிரியர்களைப் பயிலுநர் ஆசிரியர்களாக ஆட்சேர்க்கும் திட்டத்தின் கீழ் அதிபர்களினால் வழங்கப்பட்டுள்ள பல சான்றிதழ்கள் போலியானவை என தற்பொழுது தெரியவந்துள்ளது.

தொண்டர் ஆசிரியர் சேவை தொடர்பான போலிச் சான்றிதழ்களை அல்லது தவறான தகவல்களை வழங்கிய அதிபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளார். (78)

## வைத்தியசாலைகள் மீண்டும் இயக்கம்

பல வாரங்களாக இயங்காமல் முடிக்கிடந்தவேலணை அரசினர் வைத்தியசாலையும் புங்குடுதீவு அரசினர் மாவட்ட வைத்தியசாலையும் சென்ற 21-ஆம் திகதிமுதல் மீண்டும் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

ஆனால் வேலணையில் தற்காலிகமாக இயங்கி வந்த ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையும் மண்டைதீவு வைத்தியசாலையும் இன்னமும் திறக்கப்படவில்லை. (19)

## இரு தடவைகளில் தப்பியவர் மூன்றாம் முயற்சியில் பலியானார்

ராஜீவ்காந்தியைக் கொல்ல தற்கு இதற்கு முன்னரும் இருதடவைகள் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

1986ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் திகதி புதுடில்லியில் மகாத்மா காந்தியின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற போது அவரைக் கொல்ல முதல் தடவையாக முயற்சியெடுக்கப்பட்டது.

பின்னர் 1987 ஜூலையில் கொழும்பில் இலங்கை அரசபடையின் அணிவகுப்பை பார்வையிட்டசமயம் சிங்கள கடற்படைச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் இவரை அடித்துக்கொல்ல முயன்றார் இது இரண்டாவது முயற்சி.

இந்த இரு முயற்சிகளிலும் தப்பிய ராஜீவ் நேற்று முன்தினம் இரவு தமிழகத்தில் நடந்த மூன்றாவது முயற்சியில் கொல்லப்பட்டார்.


### சிறுவிளம்பரம்

**தவறிவிட்டது**

கடந்த 18-5-91 சனிக்கிழமை பஸ்ஸில் பிரயாணம் செய்கையில் நாவற்குழிக்கும்- தச்சன்தோப்புக்கும் இடையில் கைலேஞ்சியில் சுற்றப்பட்ட நிலையில் ரூபா 2500/- தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மனிதாபிமான முறையில் முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். க. முருகமூர்த்தி, கைதடி.

05100


## பொது அறிவுப் போட்டி

யாழ் வண்ணார்பண்ணை கோட்டையம்பதி இந்துஇளைஞர் மன்றத்தால் நடாத்தப்படும் பொது அறிவுப்போட்டி 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான விண்ணப்பப்படிவம் யாழ் வண்ணார்பண்ணை கோட்டையம்பதி சிவசுப்பிரமணியம் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என இந்து இளைஞர் மன்றம் அறிவித்துள்ளது. 74

# இளம் பெண் கையிலிருந்த மல்லிகை பூக்கூடைக்குள்ளேயே ராஜீவின் உயிரைப்பறித்த சக்திவாய்ந்த குண்டும் இருந்தது

ராஜீவ் காந்திக்கு வழங்குவதற்கெனக் கொண்டு வரப்பட்ட பூக்கூடைக்குள்ளேயே சக்திவாய்ந்த குண்டொன்று இருந்ததாகக் கருதப்படுவதாக நேற்று நண்பகல சென்னையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இரு பெண்களே இக்கூடைகளை அங்கு எடுத்துவந்திருந்தனர். தொலைவிலிருந்து இயக்கக்கூடிய 'ரிமோட் கொன்ட்ரோல்'வகையை இக்குண்டு சேர்ந்தது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் முக்கிய சில இடங்களில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசுவதற்காக ராஜீவ்காந்தி நேற்று முன்தினம் இரவு ஏழுமணிக்கு டில்லியிலிருந்து சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடைந்திருந்தார்.

### புண்ணியபூமியில் பாவச்செயல்

பின்னர் அவர் அங்கிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஸ்ரீராமானுஜம் பிறந்த புண்ணிய பூமியான ஸ்ரீபெரம்புத்தூரிற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

### இந்திராவுக்கே இறுதி அஞ்சலி

இரவு 10,10 மணியளவில் ஸ்ரீபெரம் புத்தூரில் அமைக்கப்பட்டிருந்த இந்திராகாந்தியின் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு இறங்கிவரும் வழியில் ஆதரவாளர்களால் வழங்கப்பட்ட மாலைகளை ஏற்றுக்கொண்டு ராஜீவ் காந்தி வந்ததாகவும் அப்போது அவருக்கு அருகில் பின்னால் பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது. மேடைக்கு 30 அடி தூரத்தில் இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

### 15 அடி உயரத்திற்கு தீச்சுவாலை

குண்டு வெடிப்பின்போது தீச்சுவாலை 15 அடி உயரத்திற்கு எழும்பியது. குண்டு வெடிப்பின் சத்தம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

### தலைப்பகுதி சிதறி விழுந்தது

குண்டு வெடிப்பினால் ராஜீவின் தலைப்பகுதி சிதறியது. அவருக்கு பாதுகாப்புக்காக அங்கு வைக்கப்பட்டிருந்த பாதுகாப்புத் தடுப்புக்கு மேலே அவரது உடல் தூக்கி வெறியப்பட்டது.

இந்தக்குண்டு வெடிப்பின் போது கொல்லப்பட்டோரின் தொகை பற்றி முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது

### சிக்கியோர் பலரின் உடல்கள் சிதறின

ராஜீவின் பாதுகாப்பு உத்தியோகத்தர், செங்கை அண்ணா மாவட்டக் காவல் துறைத் தலைவர் மொகமது இக்பால், தமிழக பொலிஸ் இன்ஸ்பெட்டர் ராஜகுரு, மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள், மாலை போட வந்த மூதாட்டியொருவர் உட்பட மொத்தம் 10 பேர் அந்த இடத்தில் உயிரிழந்ததாகவும் 50 பேர் காயமடைந்ததாகவும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

### மரகதமும் காயமடைந்தார்

காயமடைந்தோரில் முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரும் காயமடைந்துள்ளார். இவர் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



### சோனியா பொறுப்பேற்றார்

கொல்லப்பட்ட ராஜீவின் சடலம் சென்னை மத்திய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நேற்றுக்காலை சென்னை விமான நிலையத்தில் வைத்து அவரது மனைவி சோனியா காந்தி, மகள் பிரியங்கா ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டு விமானப்படை விமானத்தில் டில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மிகநுணுக்கமான இக்குண்டு வெடிப்பினை அவதானித்த புலனாய்வுத் துறையினர் குண்டுவெடிப்பில் மிகவும் கைதேர்ந்த ஒரு குழு இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

### சந்திரசேகர் டில்லி திரும்பினார்

இச் சம்பவம்பற்றிக் கேள்விப்பட்டதும் இந்திய இடைக்காலப் பிரதமர் சந்திரசேகர் தனது ஒரிஸா பயணத்தை இடைநிறுத்திவிட்டு உடனடியாக டில்லி திரும்பினார்.

ஜனாதிபதி வெங்கட்ராமன் டில்லியிலுள்ள ராஜீவ்காந்தியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்று தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

பல உலகத்தலைவர்களிடமிருந்து இவரின் மரணத்துக்கு அஞ்சலியும், கண்டனமும் தெரிவித்து செய்திகள் புது டில்லிக்கு வந்தவண்ணம் உள்ளன.

### விசாரணைக்கு அரசு தயார்

இக்கொலைச்சம்பவம்பற்றி விசாரிக்க சுப்றீம்கோட் நீதியரசர் ஒருவர் தலைமையிலான விசாரணைக் குழுவொன்றும் விசேட புலனாய்வுப் பிரிவொன்றும் நேற்று இந்திய மத்திய அரசினால் நியமிக்கப்பட்டுள்ளன.

### ராகுல் காந்தி டில்லிதிரும்பினார்

தற்பொழுது அமெரிக்காவில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் ராஜீவ்காந்தியின் ஏகபுதல்வன் ராகுல் காந்தி இன்று காலை விசேட விமானத்தில்டில்லிவந்தடைந்தார்.

### ஒருவாரகாலம் துக்க தினம்

இந்தியாவில் நேற்று முதல் ஒருவாரகாலத்திற்கு தேசிய துக்கதினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### நாளை பிற்பகல் இறுதிக் கிரியை

ராஜீவின் இறுதிச் சடங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு டில்லியில் அன்னை இந்திரா காந்தியின் சமாதியில் இடம் பெறவுள்ளதாக நேற்று நண்பகல் அறிவிக்கப்பட்டது.

### இளம் பெண்ணும் மரணமானார்

ராஜீவுக்கு மல்லிகைப்பூக் கூடை கொடுக்க எடுத்துச் சென்ற ஒரு இளம் பெண்ணும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டதாகவும், இக்கூடைக்குள்ளேயே குண்டு இருந்ததாகவும் இப்பெண் இனங்காணப்படவில்லையெனவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

சம்பவத்தில் இறந்தவர்களில் இருவரின் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

## இந்தியாவில் அரைக்கம்பத்தில் இலங்கையில் முழுக்கம்பத்தில்

ராஜீவ் காந்தியின் மரணத்துக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் இந்தியாவில் நேற்று தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. அலுவலகங்களில் அங்கு தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

அதேவேளை தேசிய வீரர்களின் தினத்தை முன்னிட்டு நேற்று இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள அரச கட்டிடங்களில் தேசியக்கொடிகள் முழுக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன.

## சென்னையில் வாகனங்கள் தீக்கிரை பஸ் சேவைகளும் இடம்பெறவில்லை

ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்துத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் வன்செயல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன

சென்னையில் பல வாகனங்கள் தாக்கப்பட்டுக் கொழுத்தப்பட்டதாகவும், சில பகுதிகளில் காங்கிரஸ் ஆதரவாளர்கள் வன்செயல்களில் இறங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழகத்திலும், இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தமிழகத்தில் நேற்று பஸ் சேவைகள் இடம் பெறவில்லை. பல முக்கிய ரயில் சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டிருந்தன. பாடசாலைகள், அலுவலகங்களும் நேற்று இயங்கவில்லை.

## சீக்கியரின் கொலைப் பட்டியலில் ராஜீவுக்கே முதலிடம்

ராஜீவ் காந்தியின் கொலைக்கு யார் காரணமென்பது பற்றி சரியான துப்பு எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை என சென்னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீக்கிய தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் ராஜீவ் காந்தியின் பெயர் முதலாவதாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நேருவின்செல்வாக்கு நேற்றுடன் முடிந்தது

ராஜீவ்காந்தியின் படுகொலையுடன் இந்தியாவில் நேருகுடும்பத்தின் அரசியல் செல்வாக்கு முடிவுக்கு வந்துள்ளது.

இந்தியா சுதந்திரம் பெற்றதன் பின்னரான 48 வருடகாலத்தில் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி ஆகிய மூன்று நேருகுடும்ப அங்கத்தவர்கள் 38 வருடகாலம் பிரதமராக ஆட்சிபுரிந்துள்ளனர்.

ராஜீவின் மரணத்துடன் நேருகுடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

### 26 ஆம் திகதியுடன் 27 ஆண்டு நிறைவு

ராஜீவின் பாட்டனார் நேரு இறந்து 27 ஆண்டுகள் எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் நிறைவுறுகிறது.

## ராஜீவ் கொல்லப்படலாமென்ற அச்சம் சோனியாவுக்கு ஆரம்பத்திலேயே இருந்தது

தமது கணவர் ராஜீவ்காந்தி கொல்லப்படலாமென்ற அச்சம் அவரது மனைவி திருமதி சோனியா காந்தியிடம் எப்போதும் இருந்துவந்தது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1984 அக்டோபரில் இந்திராகாந்தி இறந்த சமயம் அரசுப் பொறுப்பை ஏற்குமாறு ராஜீவிடம் கேட்கப்பட்டது.

அச்சமயம் அங்கிருந்த சோனியாகாந்தி தனது மாமியாரி இந்திராகாந்திக்கு வந்த நிலை ராஜீவுக்கும் ஏற்படலாமெனவும், அப்பதவியை ஏற்க வேண்டாமெனவும் ராஜீவிடம் அழுதபடி கேட்டுக் கொண்டார்.

எனினும் ராஜீவின்வற்புறுத்தலையடுத்தே அவர் அப்போது அதற்கு இணங்கியிருந்தாராம்.

## இருகட்ட வாக்களிப்புக்கள் அடுத்த மாதத்திற்கு ஒத்திவைப்பு

இந்திய பொதுத்தேர்தலில் எஞ்சியுள்ள இரு கட்டங்களுக்கான வாக்களிப்பு அடுத்த மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் 15 திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் ராஜீவ்காந்தியின் படுகொலையால் இம்மாதம் 31 ஆம் திகதி முடிவடைய வேண்டிய தேர்தல் அடுத்த மாதம் 18 ஆம் திகதி வரை பின்தள்ளியுள்ளன.

## இளைய பிரதமர் என்ற பெருமையைப் பெற்றவர் ராஜீவ்

மிக இளைய வயதில் பிரதமர் பதவியை ஏற்றவர் என்றபெருமையைப் பெற்றுள்ள ராஜீவ்காந்தி 1944ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் திகதி பம்பாயில் பிறந்தார். அப்போது இவரது பேரனான நேரு பம்பாயில் சிறையில் இருந்தார்.

ஆரம்பத்தில் இந்தியாவில் புகழ்பெற்ற டூன் பாடசாலையில் கல்வகற்ற ராஜீவ் பின்னர் லண்டன் றியலைட் கல்லூரியில் பொறியியல் கல்வியைக்கற்றார்.

அங்கு படித்துக் கொண்டிருந்த போது இவரது சக தோழியான இத்தாலியைச் சேர்ந்த சிறிந்த சமய யுவதியான சோனியாவைக் காதலித்துப் பின்னர் தனது 20 ஆவது வயதில் அவரையே தன்வாழ்க்கைத் துணைவியாகவும் ஏற்றுக்கொண்டார்.

இந்தியாவின் முதலாவது பிரதமரான நேருவின் முதலாவது பேரனான ராஜீவ் முதலில் இந்தியன் ஏயர் லைன்ஸ் நிறுவனத்தில் விமானியாகப் பணிபுரிந்தார்.

1980 இல் இருந்து ஏக சகோதரனான சஞ்சே காந்தி விமான விபத்தில் கொல்லப்பட்டதையடுத்து தாயார் இந்திராகாந்தியார் வற்புறுத்தலின் பேரில் பைலட் பதவியைத் துறந்துவிட்டு அரசியலுக்குள்காலடியெடுத்து வைத்தார்.

1984இல்திருமதி இந்திராகாந்தி சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து தனது 40வது வயதில் இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார்.

இவருக்கு ஒரு புதல்வனும், புதல்வியும் உண்டு புதல்வன் வெளிநாட்டில் கல்விகற்கிறார். புதல்வி பிரியங்கா டில்லியில் இவருடன் வாழ்ந்து வந்தார்.

1987 இல் இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பியதன் மூலமும், அதனையடுத்து இராணுவத்தை திருப்பிய ழைக்க மறுத்து வந்ததன் மூலமும் இந்திய இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பையேற்படுத்திய இவர் ஏககாலத்தில் இலங்கை அரசினதும், ஈழத் தமிழ் மக்களினதும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார்.

# கிராம சேவகர் பதவிகளுக்கு தமிழ்ப் பகுதிகளில் வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராம சேவையாளர் பிரிவுகளில் பல கிராமசேவையாளர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதால் பல வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

சில கிராம சேவகர்கள் இடம் பெயர்ந்தும் சிலர் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதனால் ஒரு கிராமசேவகர் இரண்டு மூன்று பிரிவுகளில் கடமையாற்ற வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இந்த நிலையால் பொதுமக்கள் தமது கடமைகளை உரிய நேரத்தில் செய்ய முடியாத நிலை யேற்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேபோல மன்னார் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இந்த நிலையேற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இக்குறைபாடுகள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும், வடகிழக்கு மகாண சபைக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. 38

★ பாராளுமன்றத்தில் பிரேரணை:-

# இராணுவத் தளபாடங்களுக்கு 291 கோடி ரூபா ஒதுக்கீடு

பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யக் குறைநிரப்பு பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

291 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைக் குறைநிரப்பும் பிரேரணை மூலம் பெறும் பொருட்டு பாதுகாப்பு அமைச்சினால் ஐந்து குறைநிரப்புப் பிரேரணைகள் கடந்த வெள்ளியன்றுபாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன

மேலதிக ஊர்காவற்படையினருக்கானகொடுப்பனவுபீரங்கிக்கப்பல் கடலோர தாக்குதல் படகு மற்றும் படகு ஆயுதங்கள், விமான உதிரி பாகங்கள், குண்டுகள், ரொக்கட்டுகள், பொலிஸாருக்கான ஆயுதங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்யவே இந்த 291 கோடி ரூபா விற்கான குறைநிரப்பு பிரேரணை என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடற்படையினருக்கு 53 கோடி ரூபாவும் விமானப் படைக்கு 53 கோடி ரூபாவும் ஊர்காவற்படையினருக்கு 21 கோடி ரூபாவும் இராணுவ நடவடிக்கைகளுக்காக 156 கோடி ரூபாவும் பெற குறைநிரப்பு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. (33)

சில தனியார் தொலைபேசி நிலையங்களில்

# சட்டவிரோதமான தொலைபேசித் தொடர்புகள்

சில தனியார் தொலைபேசி நிறுவனங்கள் சட்ட விரோதமான முறையில் தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தி தமது தொழிலை நடாத்திவருவதாகத் தபால் தந்தி தொடர்புகள் அமைச்சின் செயலாளர் அசோகா குணசேகரா தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 15ஆம் திகதி முதல் இவர்கள் மீது நடாத்தப்பட்ட திடீர்ச்சோதனையின் போது இந்த மோசடி அம்பலத்துக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடி நடவடிக்கையால் சில தனியார் தொலைபேசி நிலைய உரிமையாளர்கள் பெருமளவு பணம் சம்பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தபால் தந்தித் திணைக்களத்தின் அனுமதியின்றி எவரும் தனியார் நிலையங்களை நடத்த முடியாதெனவும் அவர் தெரிவித்தார். 33

குளியாப்பிட்டிய நகர சபைத்தேர்தல்

# முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒரு வாக்கேனும் கிடைக்கவில்லை

குளியாப்பிட்டியநகரசபைக்காக நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒரு வாக்கேனும் கிடைக்கவில்லை.

இந்த நகரசபைத்தேர்தலில் 2,379 வாக்காளர்கள் வாக்களித்தனர். இதில் ஐ.தே.கவுக்கு 7இடங்களிலும ஸ்ரீ.ல.சு.க. வுக்கு இரு இடங்களும் கிடைத்துள்ளன.

குளியாப்பிட்டிய நகர சபைத்தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கருத்துவெளியிட்டுள்ளார்.

# முல்லைத்தீவு ஆஸ்பத்திரிகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைகளில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதனால் நோயாளிகள் அவதியுறுகின்றனர்.

இங்குள்ள மருந்துக் கடைகளில் நீரிழிவு, இருதய நோய், இரத்த அழுத்தம் போன்ற வியாதிகளுக்கு உரிய மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி வைத்தியசாலைகளில் மின்சாரம் இல்லாமையினால் இரவு நேரங்களில் அவசர நோயாளர்களைக் கவனிப்பதில் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38

மஹரகமவில் இயந்திரங்கள் பழுது

# புற்று நோயளிகளுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலை

மஹரகமவில் உள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைபெற்று வரும் நோயாளிகள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக உயர் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புற்றுநோய்சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் மூன்று யந்திரங்களும் பழுதடைந்து இருப்பதாகவும் ஆதனால் இந்த நோயாளிகளுக்கு புற்றுநோய் பற்றிய விவரங்களைப் பரிசோதித்து அறிய முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த யந்திரங்களில் ஒன்று மூடபத்தைந்து வருடங்களுக்கு முன்பு வாங்கப்பட்டதாகவும் மற்றயவைபதினைந்தவருடங்களுக்கு முன்னர் வாங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றின் விலை ஒன்று இருபது மில்லியன் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவற்றைத் திருத்தவோ அல்லது புதியவற்றை வாங்குமாறும் சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

# க. பொ. த, பரீட்சை இன்று ஆரம்பம்

தடைப்பட்ட க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை மீண்டும் இன்று முதல் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை ஒழுங்காக நடைபெறுவதற்கு சகலரும் ஒத்துழைப்புத் தருமாறு கல்வித் திணைக்களம் கேட்டுள்ளது. ப-11

# குவைத்திலிருந்து திரும்பியோரிடம் சிலர் பணம் மோசடி

வளைகுடா யுத்தம் காரணமாக குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்களிடம் சிலர் குவைத்திலிருந்து நிவாரணம் பெற்றுத்தருவதாக கூறி பணம் பெற்று வருவதாகத் தொழில் அமைச்சுக்குமுறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

குவைத்திலிருந்து திரும்பியோர் புனர்வாழ்வு, நஷ்டஈடு, சுயவேலைவாய்ப்பு ஆகியன தொடர்பாக தொழில் அமைச்சுடனோ அல்லது வெளிநாட்டு வாய்ப்புப்பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தொழில் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி தொழில் அமைச்சர் ஜி எம். பிரேமச்சந்திரா இரகசியப் பொலிஸாரைக் கேட்டுள்ளார் 33

# இராணுவ நடவடிக்கையால் மரணமானவர்கள் குடும்பத்துக்கு 80 மில்லியன் ரூபா நிவாரணம்

யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மரணமானவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக வழங்கவென எண்பது மில்லியன் ரூபா யாழ் செயலகத்துக்கு வரவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்தவர்களின் விவரங்கள் ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு தகுதி அடிப்படையில் இப்பணம் வழங்கப்படவுள்ளது. (74)

திருமதி சோனியா...
பன்னிரண்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருமதி சோனியா காந்தி இதன் மூலம் அடுத்த மாதத்திற்கு பின் தள்ளி வைக்கப்பட்டுள்ள தேர்தலில் வேட்பாளராக நிற்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சோனியா ஓர் இத்தாலிய வர்த்தகரின் மகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## முகாமைத்துவ நிலையம் திறப்புவிழா

யாழ் கல்வித்திணைக்கள மாவட்ட முகாமைத்துவ நிலையத்திறப்பு விழா 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இதனைத் திறந்துவைப்பார்.

வாழப்பாடி...
ஜி.கே மூப்பனாரும் நேரில் கண்டுள்ளனர்.

இந்தச் சமயத்தில்வாழப்பாடி ஏற்கனவே மேடையில் ஏறி நின்றிருந்தார். மூப்பனார் ராஜீவின் பின்னால் 30 அடி தூரத்தில் வந்து கொண்டிருந்தார்.

## கிளிநொச்சி அரச அதிபர் பதவியேற்பு

கிளிநொச்சி மாவட்ட புதிய அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட எஸ். பொன்னம்பலம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமது பதவியை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்பார். திரு. பொன்னம்பலம் முல்லைத்தீவு அரசாங்க அதிபராக பணிபுரிந்து இங்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். 35

## இராணுவம் சுட்டு பெண் காயம்

நாவற்குடா பகுதியிலுள்ள தோட்டத்திற்கு மிளகாய் பிடுங்கச் சென்ற பெண்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் முருங்கையைச் சேர்ந்த பெருமாள் மரியமுத்து (36) என்பவர் காயமடைந்து யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். 72

தமிழகத்திலிருந்து...
நாட்டு சதி சம்பந்தபட்டிருக்கலாம் என குறிப்பிட்டுள்ளனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

குண்டு வெடிப்பின் போது அருகில் நின்ற இரு பெண்களின் ஆடையினுள் இருந்து சில பற்றிகள் மீட்கப்பட்டதாகச் சென்னை செய்திகள் தெரிவித்தன.

பிந்திய செய்திகளின்படி இக்கொலைக் குற்றம் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு படுத்தப்பட்டது குறித்து புலிகள் தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ்...
தல் கமிஷன் அறிவித்துள்ளது.

இந்த தொகுதிக்குரிய வாக்குகள் முன்னர் திட்டமிட்டபடி எண்ணப்படும். வாக்கு எண்ணிக்கையின்படி ராஜீவ் இங்கு தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே அங்கு மீண்டுமொரு இடைத்தேர்தல் நடத்தப்படும்

இத்தொகுதி மூலமே ராஜீவ் முதல் தடவையாக லோக்சபாவிற்குத் தெரிவாகியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ராஜீவின்...
தலைவர்களின் 'கட்அவுட்கள்' சரித்து வீழ்த்தப்பட்டன.

இதேவேளை தி மு. க. தலைவர் கருணாநிதி திட்டமிட்டு சில விஷமிகளால் தமது கட்சித்தொண்டர்கள் தாக்கப்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். இராணுவத்தையாவது அழைத்து தமிழகத்தைக் காக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆந்திரா, பஞ்சாப், ஹரியானா, கேரளம், மத்திய பிரதேசம், ஒரிஸா, மேற்கு வங்காளம், பீஹார், உத்திர பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் வன்முறைகள் வெடித்ததில் பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். முப்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆந்திராவில் முன்னாள் முதலவர் என். டி. இராமராவுக்குச் சொந்தமான திரையரங்குகள் இரண்டும் தீக்கிரையாக்கப்பட்டன.

சுதந்திரக்கட்சி...
ராஜ் பெர்னாண்டோ பிள்ளைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுவேலைவாய்ப்பு முகவர் நிலையம் நடாத்தும் இந்தப்பிரதேச சபை உறுப்பினரைக் கடத்திச் சென்று தடுத்து வைத்ததாக பொலிஸார் பெர்னாண்டோபிள்ளை மீது விசாரணை செய்து சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கேட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் ஆறு பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## பாம்பு தீண்டி குழந்தை மரணம்

தாய்க்கு அருகில் நித்திரையாக இருந்த ஐந்து வயதுக் குழந்தைக்கு பாம்பு தீண்டியதால் பரிதாபகரமாக உயிர் பிரிந்த சம்பவம் வல்வெட்டித்துறை குளத்தில் நிகழ்ந்துள்ளது. ப6

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி கற்பிக்கும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நிறைவு நாள் வைபவம் நேற்று கிளிநொச்சிமகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. (ப6)

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிகேஷர்ஸ், (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லஷ்மி" பில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 23. 05.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.